6. அறிக்கை அளித்தல்

பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக தமிழில் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை-இது வரையில் ஆங்கிலத்தில் இருந்து வந்தது—இப்போது தமிழில் இந்த அறிக்கைகளை இந்த அவைக்கு அளிப்பதற்கு நான் பெருமைப் படுகிறேன். இந்த அறிக்கையில் சில திருத்தங்கள் இருந்தாலும், அந்தத் திருத்தங்களை எல்லாம் அங்கத்தினர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நம்பி இந்த அறிக்கைகளை அவையில் தாக்கல் செய்கிறேன்.

(1) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கை துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து குழுவின் முதலாவது அறிக்கை.

(2) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் முன்னறிக்கை மீதான குழுவின் இரண்டாவது அறிக்கை.

(3) 1972-73 ஆம் ஆண்டிற்காக வாக்களிக்கப் பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடு களுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை.

7. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு, வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினை தெரிவித்துள் ளார்கள்.

8. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்ட முன் வடிவு,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1978 -ம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/78).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் வரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

(முற்பகல் 11-00)

பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் வரி வருவாய் வாயில்களைத் திரட்டும் பொருட்டு, அரசு, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல் (தமிழ்நாடு சட்டம் 6/1939) சட்டத்தின்கீழ், பெட்ரோல் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு இருபத்தொரு காசிலிருந்து இருபத்து மூன்று காசு வரையிலும், டீசல் எண்ணெய் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு பதினைந்து காசிலிருந்து பதினேழு காசு வரையிலும் உயர்த்துவதென்று முடிவு செய்துள்ளது.

இவ்வதிகரிப்புக்குப் பிறகும்கூட, தமிழ்நாட்டில் பெட்ரோல் விற்பனை விலை இதர தென் மாநிலங்களில் நிலவும் சில்லறை விற்பனை விலையைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். மேலும் இம்மாநிலத்தில் டீசல் விற்பனை விலை மற்ற தென் மாநிலங்களில் நிலவும் விற்பனை விலைக்கு அனேகமாக சமமாக இருக்கும்; உண்மையில் கேரளா, கர்நாடகா மாநிலங்களில் நிலவும் விற்பனை விலைக்குக் குறைவாக இருக்கும்.

மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 12/1978) முகவுரைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு ஆலோசனைக்காக பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது,

* 1978, மார்ச் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.